ந.க.எண். 27350/99/எப்3

நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை — 5.
நாள். 3.8.99.

## சுற்றறிக்கை

பொருள்: பணிக்குழு — நகராட்சிகள் — தினக்கூலிப் பணியாளர்களை முறையான பணியிடத்தில் நியமனம் செய்தல் குறித்து.

பார்வை: 1. அரசாணை எண். 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை நாள். 27.5.99.
2. இவ்வலுவலக சுற்றறிக்கை எண். 27350/99/எப்3 நாள். 4.6.99 மற்றும் 29.7.99.

xxx

பார்வை 1ல் காணும் அரசாணையில் தினக்கூலிப் பணியாளர்களை அவர்களின் தகுதிக்கேற்ப சம்மந்தப்பட்ட நகராட்சிகளில் அவ்வப்போது ஏற்படும் காலி பணியிடங்களில் (Entry level Post only) நியமனம் செய்து அவ்வாறு நியமனம் செய்யப்பட்ட நாளிலிருந்து அவர்களது பணி வரன்முறை செய்யப்படுவதுடன், பணிக்கால பயன்களும் கணக்கிடப்படவேண்டும் என்றும் பணிவரன் முறை செய்யப்படும் காலத்திலிருந்து ஓராண்டு வரை இவர்கள் மாதம் ரூ 2000/- என்ற தொகுப்பூதியத்தில் அமர்த்தப்படவேண்டும் என்றும் ஓராண்டிற்கு பிறகு காலமுறை ஊதியத்தில் கொண்டுவரப்படுவார்கள் என்றும் தினக்கூலிப் பணியாளர்கள் முறையாக பணியிடத்தில் நியமனம் செய்யப்படுவதற்கு முன்பு பணிபுரிந்த காலம், பணிப்பலன்களும் எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று மேற்கண்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது சம்பந்தமாக தினக்கூலிப் பணியாளர்களை பணி அமர்த்துவது குறித்து பல நகராட்சிகளில் தெளிவுரை கேட்கப்பட்டுள்ளது. எனவே, மேற்கண்ட அரசாணை எண். 125 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத்துறை நாள். 27.5.99ல் பத்தி 3 ( 2)ல் குறிப்பிட்டுள்ளவாறு காலியாக உள்ள பணியிடங்களை அந்தந்த நகராட்சிகளில் உள்ள தினக்கூலிப் பணியாளர்களை அவர்களது கல்வித்தகுதிகேற்ப முன்னுரிமை அடிப்படையில் பணி நியமனம் செய்ய தாங்களே உரிய நடவடிக்கை மேற்கொண்டு பணியிடத்தை பூர்த்தி செய்து கொள்ளுமாறு அவ்வாறு பூர்த்தி செய்த விவரத்தை இவ்வலுவலகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும், நகராட்சியில் தினக்கூலிப் பணியாளர்களின் கல்வித்தகுதிகேற்ப பணியிடம் வழங்க காலிப் பணியிடம் ஏதும் இல்லாது இருப்பின் அவர்களின் பெயர்களை தனியாக ஏற்கனவே இவ்வலுவலக சுற்றறிக்கை எண். 27350/99/ எப்3 நாள். 4.6.99 வழங்கப்பட்ட [illegible] தனியாக பட்டியலையும், பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட்ட பட்டியலையும் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(ஒம்) கே. கணேசன்,
நகராட்சி நிர்வாக இயக்குநர்.

பெறுநர்
அனைத்து நகராட்சி ஆணையர்கள்
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர்கள்.

ஆணைப்படி/அனுப்பப்படுகிறது

[signature]
கண்காணிப்பாளர் 7/8/99

7/8/99